345

ஸம்ஸ்க்ருத பால வ்யாகரணம்.

முதல் பாகம்

வ்யாகரண ஸாஹித்ய சிரோமணி
என். சேஷாத்திரி ஐயங்கார்
ஸ்வாமியால் இயற்றப் பெற்றது.

தியாகராயநகர்
ஹிந்தி பிரசார அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

விலை அணா 6.

...RISHNA MISSION HIGH SCHOOL
...AYANAGAR :: MADRAS.

P 15
N39.1
68100

ஸம்ஸ்க்ருத
பால வ்யாகரணம்.

முதல் பாகம்

வ்யாகரண ஸாஹித்ய சிரோமணி

என். சேஷாத்திரி ஐயங்கார்

ஸ்வாமியால் இயற்றப் பெற்றது.

தியாகராயநகர்

ஹிந்தி பிரசார அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை அணு 6.

SRI RAMAKRISHNA MISSION HIGH SCHOOL

TYAGARAYANAGAR :: MADRAS.

श्रीः

விஷய அநுக்ரமணிகை.

1.	वर्णाः ।	....	1
2.	अच्सन्धिः ।	....	6
3.	हल्सन्धिः ।	....	10
4.	विसर्गसन्धिः ।	....	15
5.	अजन्तशब्दाः ।	....	20
6.	हलन्तशब्दाः ।	....	39
7.	सर्वनामशब्दाः ।	....	58
8.	संख्याशब्दाः ।	....	70
9.	अव्ययानि ।	....	75
10.	स्त्रीप्रत्ययाः ।	....	80
11.	विभक्तयः ।	....	84
12.	समासाः ।	....	91
13.	एकशेषवृत्तिः ।	....	100
14.	तद्धिताः ।	....	102
15.	संख्यावाचकाः, तत्प्रकृतिकाश्च ।	...	109

ஸ்ரீ:

ஸம்ஸ்க்ருத வ்யாகரணம்

பாடம் 1.

எழுத்தியல்

वर्णाः | எழுத்துக்கள்.

வடமொழியில் வழங்கிவரும் எழுத்துக்கள் நாற்பத்தியெட்டு. அவை **अचः**, (உயிரெழுத்துக்கள்) **हलः**, (மெய்யெழுத்துக்கள்) **अनुस्वारः**, **विसर्गः** என நான்கு வகைப்படும்.

अचः | உயிரெழுத்துக்கள்.

अ, आ, इ, ई, उ, ऊ, ऋ, ॠ, ऌ, ए, ऐ, ओ, औ, (13) இவை **ह्रस्वाः** (குற்றெழுத்துக்கள்), **दीर्घाः** (நெட்டெழுதுக்கள்) என இருவகைப்படும்.

குறிலாவன:—अ, इ, उ, ऋ, ऌ.

நெடிலாவான:—आ, ई, ऊ, ॠ, ए, ऐ, ओ, औ.

हलः | மெய்யெழுத்துக்கள்.

க வர்க்கம்	क्	ख्	ग्	घ्	ङ्	
ச வர்க்கம்	च्	छ्	ज्	झ्	ञ्	
ட வர்க்கம்	ट्	ठ्	ड्	ढ्	ण्	25
த வர்க்கம்	त्	थ्	द्	ध्	न्	
ப வர்க்கம்	प्	फ्	ब्	भ्	म्	
அந்தஸ்தங்கள்		य	र	ल	व	(4)
ஊஷ்மாக்கள்		श	ष	स	ह	(4)

ஜிஹ்வாமூலீயம் ःक } இதிலுள்ள பாதி விஸர்க்கம்
உபத்மாநீயம் ःप } போன்ற எழுத்துக்கள். (2)

P15

இவை **अघोषाः** (வன்கணமெய்கள்), **घोषाः** (மென்கண மெய்கள்), **अनुनासिकाः** (அநுநாஸிகங்கள்) **अन्तस्थाः** (இடை எழுத்துக்கள்) **ऊष्माणः** (ஊஷ்மாக்கள்) என ஐந்து வகைப் படும்.

1	வன்கணம்	क ख	च छ	ट ठ	त थ	प फ	श	ष	स	
2	மென்கணம்	ग घ ङ	ज झ ञ	ड ढ ण	द ध न	ब भ म	य र	ल	व	ह
3	அநுநாஸிகங்கள்	ङ	ञ	ण	न	म				
4	அந்தஸ்தங்கள்	य	र	ल	व					
5	ஊஷ்மாக்கள்	श	ष	स	ह					

अनुस्वारः—இது ஒரு உயிரின் தலைமேல் ஒரு புள்ளி வடிவமாய் எழுதப்படும். இதன் உச்சரிப்பு 'ம்' என்பதின் உச்சரிப்பை ஏறக்குறைய ஒத்திருக்கும்.

(உ-ம்) **अं, ओं.**

विसर्गः—இது ஒரு உயிரின் பக்கத்தில் இரண்டு சுழி வடிவமாய் எழுதப்படும். முன்வரும் உயிருடன் கூடிய "ஹ்" என்ற எழுத்தின் ஒலியை இதன் ஒலி ஏறக்குறைய ஒத்திருக்கும்.

(உ-ம்) **रामः, हरिः, शम्भुः**

எழுத்துக்களின் பிறப்பிட அட்டவணை.

கழுத்து	தாடை (தாலு)	உச்சி (தலை)	பற்கள்	உதடுகள்	மூக்கு	கழுத்தும் தாடையும்	கழுத்தும் உதடுகளும்	பற்களும் உதடுகளும்
अ	इ	ऋ	ऌ	उ	ङ	ए	ओ	व
क	च	ट	त	प	ञ	ऐ	औ	
ख	छ	ठ	थ	फ	ण			
ग	ज	ड	द	ब	न			
घ	झ	ढ	ध	भ	म			
ङ	ञ	ण	न	म	अं			
ह	य	र	ल					
अः	श	ष	स					

अज्विशिष्टा हलः | உயிர்மெய்யெழுத்துக்கள்.

உயிரும் மெய்யும் கூடிப் பிறக்கும் எழுத்துக்களுக்கு உயிர்மெய் எனப்பெயர். அவை வருமாறு:—

क् + अ = क

*क् + आ = का

क् + इ = कि

क् + ई = की

क् + उ = कु

क् + ऊ = कू

क् + ऋ = कृ

क् + ॠ = कॄ

क् + ऌ = कॢ

क् + ए = के

क् + ऐ = कै

क् + ओ = को

क् + औ = कौ

இப்படியே மற்ற எழுத்துக்களிலும் கண்டுகொள்க.

* உயிரும் மெய்யும் கூடி உயிர்மெய் பிறக்கும்போது தொடங்கிய உயிர்கள் முறையே आ ा, ि, ी, ु, ू, ृ ॄ, ॢ, े, ै, ो, ौ என்று எழுதப்படுகின்றன.

संयुक्ताक्षराणि । கூட்டெழுத்துக்கள்.

இரண்டு அல்லது அதற்கு மேலான மெய்யெழுத்துக்கள் கூடிஉண்டாகும் எழுத்துக்கள் **संयुक्ताक्षराणि** (கூட்டெழுத்துக்கள்) எனப்படும்.
இவை பின்வருமாறு:—

*क् + क = क्क	त् + व = त्व
क् + त = क्त	द् + व = द्व
क् + न = क्न	द् + य = द्य
क् + र = क्र	द् + म = द्म
क् + म = क्म	द् + ध = द्ध
ख् + य = ख्य	प् + त = प्त
ग् + न = ग्न	र् + क = र्क
च् + च = च्च	श् + च = श्च
ज् + ञ = ज्ञ	श् + र = श्र
ट् + ट = ट्ट	ष् + ट = ष्ट

त् + त = त्त   स् + त = स्त

ह् + य = ह्य

त् + स् + न = त्स्न

त् + म् + य = त्म्य

स् + त् + र = स्त्र

வடமொழியில் எண்கள் வருமாறு:—

1	2	3	4	5	6	7	8	9	0
१	२	३	४	५	६	७	८	९	०

வினாக்கள்.

1. குற்றெழுத்துக்கள் யாவை?
2. நெட்டெழுத்துக்கள் யாவை?
3. வன்கண மெய்கள் யாவை?
4. மென்கண மெய்கள் யாவை?
5. அந்தஸ்தங்கள் யாவை?
6. அநுநாஸிகங்கள் யாவை?
7. ஊஷ்மாக்கள் யாவை?
8. அநுஸ்வாரம் எது?
9. விஸர்க்கம் எது?
10. வடமொழியில் மொத்த எழுத்துக்கள் எத்தனை?

பாடம் 2.

புணரியல்

सन्धिः । புணர்ச்சி.

பதங்கள் ஒன்றோடு ஒன்று புணரும்போது நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் ஒன்றுபடப் புணர்வது ஸந்தி எனப்படும். இது **अच् सन्धिः** (உயிர் புணர்ச்சி) எனவும், **हल् सन्धिः** (மெய் புணர்ச்சி) எனவும், **विसर्ग सन्धिः** எனவும், மூன்று வகைப்படும்.

अच् सन्धिः ।

ஸம்ஸ்க்ருதத்தில் இரண்டு உயிர்கள் அனேகமாய் மாறுதல் அடையாமல் அப்படியே எழுதப்படுவதில்லை.

1. **अ, इ, उ, ऋ** இவ்வெழுத்துக்கள் குறிலாயினும் நெடிலாயினும் தம் முன் தாம்வரின் இரண்டும் கெட அவ்வெழுத்தின் தீர்க்கம் தோன்றும்

(உ-ம்) तत्र + अस्ति = तत्रास्ति

अत्र + आस्ते = अत्रास्ते

वारि + इह = वारीह

उपरि + ईक्षते = उपरीक्षते

स्वादु + उदकम् = स्वादूदकम्

कर्तृ + ऋणम् = कर्तॄणम्

2. **अ** கார **आ** காரங்களுக்குப் பின் **इ, उ, ऋ, ऌ** குறிலாயினும் நெடிலாயினும் வரின் இரண்டும் கெட ஏற்றதோர் குண எழுத்துத் தோன்றும். வடமொழியில் **ए, ओ, अर्, अल्** இவைகளுக்குக் குணமென்று பெயர். **अ** கார **आ** காரங்களுக்குப்பின் **इ, उ, ऋ, ऌ** குறிலாயினும் நெடிலாயினும் வரின் அவை முறையே **ए, ओ, अर्, अल्** என குணம் பெற்று வரும்.

(உ-ம்) तव + इच्छा = तवेच्छा ।

यथा + इष्टम् = यथेष्टम् ।

इह + ऋषभः = इहर्षभः ।

मम + ईशः = ममेशः

पिब + उदकम् = पिबोदकम् ।

तव + ऌकारः = तवल्कारः

3. **अ** கார **आ** காரங்களுக்குப்பின் **ए, ऐ, ओ, औ** வரின் இரண்டும் கெட ஏற்றதோர் வ்ருத்தி எழுத்துத் தோன்றும். வடமொழியில் **ऐ, औ, आर्, आल्** இவைகளுக்கு வ்ருத்தி என்று பெயர். **अ** கார **आ** காரங்களுக்குப்பின் **ए, ऐ,** வரின் **ऐ** எனவும் **ओ, औ** வரின் **औ** எனவும் வ்ருத்தி பெற்று வரும்.

(உ-ம்) मम + एव = ममैव ।

तस्य + ओजः = तस्यौजः ।

तव + ऐक्यम् = तवैक्यम्

मम + औषधम् = ममौषधम्

குண வ்ருத்திகளைக் காட்டும் அட்டவணை.

உயிர்	इ ई	उ ऊ	ऋ ॠ	ऌ
குணம்	ए	ओ	अर्	अल्
வ்ருத்தி	ऐ	औ	आर्	आल्

4. **इ, उ, ऋ, ऌ** (குறிலாயினும் நெடிலாயினும்) இவற்றுக்குப்பின் இனமல்லாத பிற உயிர் வரின் அவை முறையே **य्, व्, र्, ल्** எனத் திரியும்,

(உ-ம்) फलानि + अत्ति = फलान्यत्ति ।

गौरी + अत्र = गौर्यत्र ।

मधु + अपिबत् = मध्वपिबत् ।

नेतृ + इदम् = नेत्रिदम् ।

ऌ + आकृतिः = लाकृतिः

5. **ए, ओ, ऐ, औ** இவற்றுக்குப் பின் உயிர் வரின் இவை முறையே **अय्, अव्, आय्, आव्** எனத் திரியும்.

(உ-ம்) हरे + एहि = हरयेहि ।

विष्णो + इह = विष्णविह ।

श्रियै + उद्यतः = श्रियायुद्यतः ।

गुरौ + उत्कः = गुरावुत्कः

6. நிலை மொழியின் ஈற்றிலுள்ள **य्, व्** எழுத்துக்கள் **अ** காரத்திற்கு பின் வரின் அவை கெடினும் கெடும். அப்போது இயல்பாய் முடியும்.

(உ-ம்) हरय् + एहि = हर एहि அல்லது हरयेहि

विष्णव् + इह = विष्ण इह அல்லது विष्णविह

7. ஒரு மொழியின் ஈற்றிலுள்ள ए, ओ எழுத்துக்களுக்கு பின் अ காரம் வரின் அது கெடும். அதன் இடத்தில் ऽ என்ற குறி எழுதப்படும்

(உ-ம்) हरे + अव = हरेऽव। विष्णो + अव = विष्णोऽव.

8. இரண்டு உயிர்கள் சேராமல் இயல்பாகும் இடங்களும் சில உண்டு. அதாவது நிலைமொழி ஈற்றிலுள்ள ई, ऊ, ए எழுத்துக்கள் இருமையினுடையதாயின் அவைகளுக்குப் பின் உயிர் வரின் இயல்பாய் முடியும்.

(உ-ம்) कवी + आरोहतः = कवी आरोहतः।

अमू + आसाते = अमू आसाते।

पचेते + इमौ = पचेते इमौ।

வினாக்கள்.

1. குணம், வ்ருத்தி என்று எவைகளுக்குப் பெயர்?

2. इ, उ, ऋ, लृ இவற்றின் குண எழுத்துக்கள் யாவை? வ்ருத்தி எழுத்துக்கள் யாவை?

3. इ, उ, ऋ, लृ இவற்றின் பின் இனமல்லாத எழுத்துக்கள் வரின் எப்படித் திரியும்?

4. ए, ऐ, ओ, औ இவற்றின் பின் உயிர் வரின் எப்படித் திரியும்?

5. अ எப்போது கெடும்?

6. अ, इ, उ, ऋ தம்முன் தாம் வரின் எப்படித் திரியும்?

7. இரண்டு உயிர்கள் சேராத இடம் எது?

பாடம் 3.

हल्सन्धिः ।

9. स् என்பதோ அன்றி त வர்க்க எழுத்தோ, श् என்னும் எழுத்துடனே அல்லது च வர்க்க எழுத்துடனே புணர்ந்தால் स् என்பது श् எனவும் त வர்க்க எழுத்து च வர்க்க எழுத்தாகவும் திரியும்.

(உ-ம்) हरिस् + शेते = हरिश्शेते । रामस् + चरति = रामश्च-[रति

सत् + चित् = सच्चित् । चक्रिन् + जय = चक्रिञ्जय

सत् + जनः = सज्जनः

10. स् என்பதோ அன்றி त வர்க்க எழுத்தோ, ष् அல்லது ट வர்க்க எழுத்துடன் புணர்ந்தால் स् என்பது ष् எனவும் त வர்க்கம் ट வர்க்கமாகவும் திரியும்.

(உ-ம்) रामस् + षष्ठः = रामष्षष्ठः । निशितस् + टङ्कः = निशितष्टङ्कः ।

तत् + टीका = तट्टीका । उद् + डयते = उड्डयते ।

11. நிலைமொழி யீற்றிலுள்ள மெய்க்குப் பின் அநுநாஸிகங்கள் வரின் அம்மெய் தன் வர்க்கத்தின் அநுநாஸிக மெய்யாக மாறினும் மாறும். (வருமொழியின் அநுநாஸிகம் ஒரு விகுதியைச் சார்ந்ததாயின் நிலைமொழி யீற்று மெய் தன் வர்க்கத்தின் அநுநாஸிக மெய்யாக மாறியே வரும்.)

(உ - ம்) वाग् + माधुर्यम् = वाङ्माधुर्यम् அல்லது वाग् माधुर्यम्

षट् + मासा: = षण्मासा: அல்லது षड् मासा:

तद् + नगरम् = तन्नगरम् ,, तद् नगरम्

(உ - ம்) वाग् + मयम् = वाङ्मयम्

चिद् + मात्रम् = चिन्मात्रम्

षट् + नाम् = षण्णाम्

अप् + मयम् = अम्मयम्

12. त வர்க்க எழுத்திற்குப் பின் ल् வரின் அத் தவர்க்க எழுத்து ल् எனத் திரியும்.

(உ - ம்) तद् + लेपनम् = तल्लेपनम्

विद्वान् + लिखति = विद्वाँल्लिखति

13. வர்க்கங்களின் முதல் நான்கு எழுத்துக்களுக்குப் பின் ह् வரின் அது அவ்வவ்வர்க்கத்தின் நான்காம் எழுத்தாய் திரியும்.

(உ - ம்) सम्यक् + हुत: = सम्यग्घुत:

तद् + हितम् = तद्धितम्

14. நிலை மொழியீற்று மெய்களுக்குப் பின் வன்கணை மெய்வரின் அந்த நிலைமொழி யீற்று (நாஸிகை ஒழிந்த) மெய்கள் தம் வர்க்கத்தின் முதலெழுத்தாகத் திரியும்.

(உ - ம்) वाग् + कलह: = वाक्कलह:

दृषद् + पतति = दृषत्पतति

ककुभ् + प्रान्तः = ककुप्प्रान्तः

15. நிலைமொழி யீற்றிலுள்ள (அநுநாஸிகம் ஒழிந்த) வர்க்க எழுத்துக்களுக்குப் பின் வரும் श् என்பது छ् எனத் திரியும். ஆனால் அந்த श् க்குப் பின் உயிரேனும், அந்தஸ்தங்களேனும் அநுநாஸிகங்களேனும் வரல் வேண்டும்.

(உ-ம்) पृथक् + शेते = पृथक्छेते

अवदत् + शठः = अवदच्छठः

16. பின் வருமொழி மெய் வரின் நிலைமொழி யீற்றிலுள்ள म् அநுஸ்வாரமாகத் திரியும். அவ்வநுஸ்வாரத்திற்குப் பின் (ஊஷ்மம் ஒழிந்த) மெய் வரின் வரும் வர்க்கத்தின் அநுநாஸிக எழுத்தாகத் திரியினும் திரியும். य, व, ल வரின் அநுநாஸிக य, व, ल எழுத்தாகத் திரியும் अहम् + हसामि = अहं हसामि

(உ-ம்) त्वं + करोषि = त्वङ्करोषि அல்லது त्वं करोषि

सं + चरति = सञ्चरति ,, संचरति

यं + लोकम् = यँल्लोकम् ,, यं लोकम्

सं + यन्ता = सँय्यन्ता ,, संयन्ता

17. குறிலை யடுத்துவரும் (மொழி யீற்றிலுள்ள) न्, ङ्, ण् எழுத்துக்களுக்குப் பின் உயிர் வரின் அவை இரட்டிக்கும்.

(உ-ம்) प्रत्यङ् + आत्मा = प्रत्यङ्ङात्मा

सुगण् + ईशः = सुगण्णीशः

सन् + अच्युतः = सन्नच्युतः

18. च्, छ्, ट्, ठ्, त्, थ् வரின் நிலைமொழியீற்றிலுள்ள न् என்னும் எழுத்து அநுஸ்வார ஸகாரங்களாகத் திரியும், ஆனால் च् முதலியவைகளுக்குப் பின் உயிரேனும் அந்தஸ்தங்களேனும், அநுநாஸிகங்களேனும் வரல் வேண்டும்.

(உ - ம்) बिडालान् + ताडयति = बिडालांस्ताडयति

भवान् + छिनत्ति = भवांश्छिनत्ति

19. உயிருக்குப்பின் छ् வரின் இடையில் च् தோன்றும்.

(உ - ம்) तव + छाया = तवच्छाया

महती + छाया = महतीच्छाया

20. பின் உயிர் அல்லது மென்கணை மெய் வரின், நிலைமொழியீற்றிலுள்ள (அநுநாஸிகம் ஒழிந்த) மெய் தன் வர்க்கத்தின் மூன்றாம் எழுத்தாய் திரியும்.

(உ - ம்) पृथक् + उपविशति = पृथगुपविशति

मरुत् + वाति = मरुद्वाति

21. र् என்பதற்குப்பின் र् வரின் அது கெடும். அப்போது முன்வரும் (ऋ ஒழிந்த) குறில் நீளும்.

(உ - ம்) पुनर् + रमते = पुनारमते

हरिर् + रम्यः = हरीरम्यः

शम्भुर् + राजते = शम्भू राजते

22. ஒரே பதத்தில் ऋ, र्, ष् இவைகளுக்குப் பின் न् வரின் அது ण् எனத் திரியும். இடையில் உயிர், (ऌ ஒழிந்த) அந்தஸ்தங்கள், ह्, क வர்க்கம், प வர்க்கம் வரினும் न् என்ற எழுத்து ण् எனத் திரியும். ஆனால் न् ஒரு மொழியின் ஈற்றில் இருந்தால் ण् எனத் திரியாது.

(உ - ம்) नृ + नाम् = नृणाम् । चतुर् + नाम् = चतुर्णाम्

पूष + ना = पूष्णा । हरि + ना = हरिणा

23. अ கார आ கார மல்லாத உயிர், क வர்க்கம், र् இவைகளுக்குப் பின் வரும் स् என்ற எழுத்து ष् எனத் திரியும்.

(உ - ம்) हरि + सु= हरिषु

वाक् + सु = वाक्षु

चतुर् + सु = चतुर्षु

வினக்கள்.

1. स् என்ற எழுத்து எப்போது श्, ष् எனத் திரியும்?

2. त வர்க்கம் — च வர்க்கமாகவும் ट வர்க்கமாகவும் திரிவதற்கு விதி என்ன ?

3. त வர்க்கத்துக்குப் பின் ल् வரின் எப்படி புணரும் ?

4. सत् + मङ्गलम्, षट् + मुखानि இவை எப்படி புணரும்? விதி என்ன ?

5. सत् + शास्त्रम्, भवान् + तरति இவைகளைச் சேர்த்து எழுதி விதியும் கூறு.

6. ण्, ङ्, न् இவை எப்போது இரட்டிக்கும் ?

7. वाग्धरति, तद्धविः இங்கு வந்திருக்கும் ஸந்தி விதியை எழுது.

8. र् க்குப் பின் र् வரின் எவ்வாறு புணரும் ?

9. न् என்பது எப்போது ण् எனத் திரியும் ? உதாரணம் தருக.

10. स् எப்போது ष् எனத்திரியும்? உதாரணம் என்ன?

பாடம் 4.

विसर्गसन्धिः ।

24. தனித்து நிற்பினும், பின் வன்கண மெய் வரினும் நிலை மொழி யீற்றிலுள்ள र्, स् இவை விஸர்க்கமாகத் திரியும்.

(உ-ம்) रामस् + करोति = रामः करोति

पुनर् + पठति = पुनः पठति

उच्चैस् = उच्चैः । प्रातर् = प्रातः

25. விஸர்க்கத்துக்குப் பின் च्, छ्, ट्, ठ्, त्, थ् இவை வரின் அவ்விஸர்க்கம் स् எனத் திரியும்.

(உ-ம்) विष्णुः + त्राता = विष्णुस्त्राता

हरिः + चरति = हरिश्चरति

निशितः + टङ्कः = निशितष्टङ्कः

26. அகரத்தை அடுத்து வரும் விஸர்க்கத்துக்குப் பின், அகரம் அல்லது மென்கண மெய் வரின் அவ்விஸர்க்கம் उ எனத் திரியும்.

(உ-ம்) रामः + अर्च्यः = रामोऽर्च्यः

देवः + वन्द्यः = देवो वन्द्यः

27. அகார ஆகாரங்களை அடுத்து வரும் விஸர்க்கத்துக்குப் பின் (அகாரம் ஒழிந்த) உயிர் வரினும் மென்கண

மெய் வரினும், அவ்விஸர்க்கம் கெடும். அப்போது இயல்பாய் முடியும்.

(உ - ம்) बुधः + आगच्छति = बुध आगच्छति

देवाः + इच्छन्ति = देवा इच्छन्ति

देवाः + नम्याः = देवा नम्याः

28. அகாரம் ஒழிந்த உயிரை அடுத்துவரும் விஸர்க்கத்துக்குப் பின் உயிர் அல்லது மென்கணமெய் வரின் அவ்விஸர்க்கம் र् எனத் திரியும்.

(உ - ம்) भानुः + उदेति = भानुरुदेति

हरिः + जयति = हरिर्जयति

29. **सः एषः**, இவைகளின் விஸர்க்கத்துக்குப் பின் மெய் வரின் அவ் விஸர்க்கம் கெடும்.

(உ - ம்) सः + शम्भुः = स शम्भुः

एषः + विष्णुः = एष विष्णुः

வினாக்கள்.

1. விஸர்க்கம் எப்போது **स्, ष्, श्** எனத் திரியும்?

2. **रामः + वन्द्यः** சேர்த்து ஸந்தி விதி கூறுக.

3. விஸர்க்கம் எப்போது கெடும்? உதாகரணத்துடன் விளக்கிக் காண்பி.

பாடம் 5.

பெயரியல்

सुबन्तानि । பெயர்ச் சொல்.

30. வடமொழியில் வேற்றுமை யுருபுகளை ஏற்று வாக்யத்தில் வழங்கி வரும் பெயர்ப் பகுதிக்கு **प्रातिपदिकम्** என்று பெயர். அப் ப்ராதிபதிகங்களுக்கு **पुंलिङ्गम्** (ஆண்பால்) **स्त्रीलिङ्गम्** (பெண்பால்) **नपुंसकलिङ्गम्** (ஒன்றன்பால்) என மூன்று லிங்கங்கள் உண்டு. இவைகளில் சில மூன்று லிங்கங்களிலும், சில இரண்டு லிங்கங்களிலும் சில ஒரே லிங்கத்திலும் வரும். தமிழில் சில அடையாளங்களைக் கொண்டு ஆண்பால் எனவும் பெண்பால் எனவும் ஒன்றன்பால் எனவும் கூறுவது போல் வடமொழியில் குறிகளைக் கொண்டு லிங்க நிச்சயம் செய்ய முடியாது. மனைவி என்னும் ஒரே பொருளில் **दाराः (पुं - नि· ब), भार्या (स्त्री), कलत्रम् (नपुं)** என மூன்று லிங்கங்களிலும் மூன்று ஸம்ஸ்க்ருத பதங்கள் உண்டு. ஆகையால் நிகண்டு (அகராதி) முதலிய நூல்களிற் காணும் குறிப்புக்களைக் கொண்டே லிங்கம் நிச்சயிக்கப் படவேண்டும்.

வடமொழியில் எழு வேற்றுமைகள் உண்டு. அவற்றுக்கு **विभक्तयः** என்று பெயர். அவை **प्रथमा** (முதல் வேற்றுமை), **संबोधन प्रथमा** (விளி வேற்றுமை அல்லது எட்டாம் வேற்றுமை), **द्वितीया** (இரண்டாம் வேற்றுமை), **तृतीया** (மூன்றும் வேற்றுமை), **चतुर्थी** (நான்காம் வேற்

றுமை), **पञ्चमी** (ஐந்தாம் வேற்றுமை), **षष्ठी** (ஆறும் வேற்றுமை), **सप्तमी** (ஏழாம் வேற்றுமை) எனப்படும். ஒவ்வொரு வேற்றுமையும் ஒவ்வொரு பொருளைக் குறிக்கும். முதல் வேற்றுமைச் சொல்லுக்கு அச்சொற் பொருளை யன்றி வேறோர் பொருள் இல்லை.

प्रथमा	—	रामः	ராமன்
सं. प्रथमा	ஏ, ஓ,	हे राम !	ஏ ராமனே
द्वितीया	ஐ	रामं	ராமனை
तृतीया	ஆல், ஓடு, உடன்	रामेण	ராமனால்
चतुर्थी	பொருட்டு, கு	रामाय	ராமன் பொருட்டு
पञ्चमी	காட்டில், நின்றும் இருந்து	रामात्	ராமனிடமிருந்து
षष्ठी	கு, உடைய	रामस्य	ராமனுக்கு
सप्तमी	இல், கண், இடத்தில்	रामे	ராமனிடத்தில்

வடமொழியில் எண்கள் மூன்று, அவற்றுக்கு **वचनानि** என்று பெயர். அவை **एकवचनम्** (ஒருமை), **द्विवचनम्** (இருமை), **बहुवचनम्** (பன்மை) என்பனவாம். ஒவ்வொரு விபக்தியிலும் மூன்று எண்களைக் குறிக்க மூன்று உருபுகளாக இருபத்தொன்று வேற்றுமையுருபுகள் உண்டு. இவ்வேற்றுமை யுருபுகளுக்கு **सुप्** என்று பெயர். இவ் வுருபுகளை இறுதியில் ஏற்றுவரும் பெயர்ச் சொற்களுக்கு **सुबन्तानि** என்று

பெயர். இவ்வுருபுகளை ஏற்கும் சொற்பகுதி மாத்திரம் ப்ராதிபதிகங்கள் எனப்படுகின்றன. உயிரீற்று ப்ராதிபதிகங்கள் **अजन्तानि** எனவும் மெய்யீற்று ப்ராதிபதிகங்கள் **हलन्तानि** எனவும் வழங்கி வருகின்றன.

सुपः । வேற்றுமை உருபுகள்.

विभक्तिः	एकवचनम्	द्वि.	ब.
प्र	स्	औ	अस्
संप्र	स्	औ	अस्
द्वि	अम्	औ	अस्
तृ	आ	भ्यां	भिस्
च	ए	भ्यां	भ्यस्
प	अस्	भ्यां	भ्यस्
ष	अस्	ओस्	आम्
स	इ	ओस्	सु

இவை ப்ராதிபதிகங்களோடு கூடும்போது அடுத்து வரும் பாடத்தில் குறிக்கப்பட்டுள்ள மாறுதல்களை அடைகின்றன.

பாடம் 6.

अजन्त पुंल्लिङ्ग शब्दाः ।

अकारान्ताः ।

31. குறில் அல்லது **ए, ओ** என்னும் எழுத்துக்குப் பின் விளிவேற்றுமையுருபாகிய **स्** வரின் அவ்வுருபு கெடும்.

(உ-ம்) हे राम (राम + अस्)

32. **अ, इ, उ,** என்பவற்றுக்குப் பின் இரண்டாம் வேற்றுமை ஒருமை உருபாகிய **अम्** வரின் அதில் உள்ள **अ** கெடும்.

(உ-ம்) राम + अम् = रामम्

33. இரண்டாம் வேற்றுமைப் பன்மை உருபாகிய **अस्** என்பதின் **स्**, நெட்டெழுத்துக்குப் பின் வரின் அந்த **स्** புல்லிங்கத்தில் **न्** எனத் திரியும்.

(உ-ம்) राम + अस् = रामान्

34. **अ** கார ஈற்றுப் பெயரடிக்குப் பின் 3, 4, 5, 6 வேற்றுமை ஒருமை உருபுகள் வரின் அவை முறையே **इन, या, आत्, स्य** எனத் திரியும்.

(உ-ம்) राम + इन = रामेण

35. **भ्याम्, य** இவை பின் வரின் பெயரடியின் ஈற்று **अ** காரம் நீளும்.

(உ-ம்) राम + भ्याम् = रामाभ्याम्

36. **अ** கார ஈற்றுச் சொல்லுககுப் பின்வரும் மூன்றும் வேற்றுமைப் பன்மை உருபு **भिस्** என்பது **ऐस्** எனத் திரியும்.

(உ-ம்) राम + भिस् = रामैः

37. **भ्यस्, ओस्,** सु இவை வரின் பெயரடியின். ஈற்று **अ** காரம், **ए** எனத் திரியும்.

(உ-ம்) राम + भ्यस् = रामेभ्यः । राम + ओस् = रामे + ओस् = रामयोः

38. குறில் ஈற்றுச் சொல்லுக்குப் பின்னும், பெண் பாலைக் குறிக்கும் **आ, ई** ஈற்றுச் சொற்களுக்குப் பின்னும் **आम्** என்னும் உருபு வரின், இடையே **न्** தோன்றும். அப் போது குறில் ஈறானது நீளும்.

(உ-ம்) राम + आम् = रामाणाम्

अकारान्तः पुल्लिङ्गो रामशब्दः

रामः	रामौ	रामाः
हे राम	हे रामौ	हे रामाः
रामं	रामौ	रामान्
रामेण	रामाभ्यां	रामैः
रामाय	रामाभ्यां	रामेभ्यः
रामात्	रामाभ्यां	रामेभ्यः
रामस्य	रामयोः	रामाणाम्
रामे	रामयोः	रामेषु

பாடம் 7.

इकारान्ताः उकारान्ताश्च ।

39. **इ, उ,** ஈற்றுச் சொல்லடிக்குப் பின், 1, 2, 8-ம் வேற்றுமை இருமை உருபாகிய **औ** வரின் இரண்டும் கெட முன்னதின் தீர்க்கம் தோன்றும்.

(உ-ம்) हरी, शम्भू

40. **इ, उ** ஈற்றுச் சொல்லடிக்குப்பின் 1, 8 வேற்றுமைப் பன்மை உருபுகளும், 4, 5, 6, 8 வேற்றுமை ஒருமை உருபுகளும் வரின் ஈற்று **इ, उ** இவ்விரண்டும் அவற்றின் குணங்களை ஏற்று வரும்.

(உ-ம்) हरयः, शम्भवः

41. **इ, उ, ऋ** ஈற்றுப் பெயரடிக்குப் பின் இரண்டாம் வேற்றுமைப் பன்மை உருபாகிய **अस्** வரின் இண்டும் கெட முன்னதின் தீர்க்கம் தோன்றும்.

(உ-ம்) हरीन्, शम्भून्, धातॄन्

42. **इ, उ** ஈற்று (ஸ்த்ரீலிங்கமல்லாத) சொல்லடிகளுக்குப்பின் வரும் 3-ம் வேற்றுமை ஒருமை உருபாகிய **आ** என்பது **ना** எனத் திரியும்.

(உ-ம்) हरिणा, शम्भुना ।

43. **ए, ओ** இவற்றுக்குப் பின் 5, 6-ம் வேற்றுமை ஒருமை உருபாகிய **अस्** வரின் அதில் உள்ள **अ**கரம் கெடும்.

(உ-ம்) हरेः, शम्भोः ।

44. **इ, उ** ஈற்றுச் சொற்களுக்குப் பின்வரும் 7-ம் வேற்றுமை ஒருமை உருபாகிய **इ** என்பது **औ** எனத் திரியும். அப்போது ஈற்று **इ, उ** கெடும்.

हरौ, शम्भौ.

इकारान्तः पुंल्लिङ्गो हरिशब्दः

हरिः	हरी	हरयः
हे हरे	हे हरी	हे हरयः
हरिं	हरी	हरीन्
हरिणा	हरिभ्यां	हरिभिः
हरये	हरिभ्यां	हरिभ्यः
हरेः	हरिभ्यां	हरिभ्यः
हरेः	हर्योः	हरीणाम्
हरौ	हर्योः	हरिषु

उकारान्तः पुंल्लिङ्गः शम्भुशब्दः

शम्भुः	शम्भू	शम्भवः
हे शम्भो	हे शम्भू	हे शम्भवः
शम्भुं	शम्भू	शम्भून्
शम्भुना	शम्भुभ्यां	शम्भुभिः
शम्भवे	शम्भुभ्यां	शम्भुभ्यः
शम्भोः	शम्भुभ्यां	शम्भुभ्यः
शम्भोः	शम्भ्वोः	शम्भूनां
शम्भौ	शम्भ्वोः	शम्भुषु

பாடம் 8.

ऋकारान्ताः ।

45. முதல் வேற்றுமை ஒருமை உருபு வரின் ऋ கார ஈற்றுச் சொல்லின் ஈற்று ऋ காரம் आ எனத் திரியும். அப்போது स् கெடும். धाता, पिता

46. ऋ கார ஈற்றுச் சொல்லுக்குப் பின் 1, 8, இவ் வேற்றுமை இருமை பன்மை உருபுகள் வரினும் 2-ம் வேற்றுமை ஒருமை இருமை உருபுகள் வரினும் ஈற்று ऋ காரம் आर् எனத் திரியும், ஆனால் पितृ, भ्रातृ, नृ முதலிய சில சொற்களின் ऋ காரம் अर् எனத் திரியும்:— धातारौ, पितरौ.

47. ऋ கார ஈற்றுச் சொல்லுக்குப் பின் 7, 8 வேற்றுமை ஒருமை உருபுகள் வரின் ऋ என்பது अर् எனத் திரியும்.

(உ-ம்) धातरि, पितरि

48. ஒரு பதத்தின் இறுதியில் ஒன்றுக்கு மேல்பட்ட மெய்கள் வரின் முதல் மெய் தவிர ஏனைய மெய்கள் கெடும்.

(உ-ம்) हे धातः, हे पितः

49. ऋ கார ஈற்றுச் சொல்லுக்குப் பின் 5, 6-ம் வேற்

றுமைகளின் ஒருமை உருபாகிய **अस्** வரின் இரண்டும் கெட **उर्** என்பது தோன்றும்.

(உ-ம்) धातुः, पितुः

ऋकारान्तः पुंलिङ्गो धातृ शब्दः

धाता	धातारौ	धातारः
हे धातः	हे धातारौ	हे धातारः
धातारं	धातारौ	धातॄन्
धात्रा	धातृभ्यां	धातृभिः
धात्रे	धातृभ्यां	धातृभ्यः
धातुः	धातृभ्यां	धातृभ्यः
धातुः	धात्रोः	धातॄणाम्
धातरि	धात्रोः	धातृषु

ऋकारान्तः पुंलिङ्गः पितृशब्दः

पिता	पितरौ	पितरः
हे पितः	हे पितरौ	हे पितरः
पितरं	पितरौ	पितॄन्

शेषं धातृवत्

பாடம் 9.

ओकारान्ताः ।

50. **ओ** கார ஈற்றுச் சொல்லுக்குப் பின் 1, 8 வேற்றுமை உருபுகளும், 2-ம் வேற்றுமை இருமை உருபும் வரின் ஈற்று **ओ** காரம் **औ** எனத் திரியும்.

(உ-ம்) गौः

51. இரண்டாம் வேற்றுமை ஒருமை, பன்மை உருபுகள் வரின் ஈற்று **ओ** காரம் **आ** எனத் திரியும்.

(உ-ம்) गाम्

ओकारान्तः पुंलिङ्गो गो शब्दः

गौः	गावौ	गावः
हे गौः	हे गावौ	हे गावः
गां	गावौ	गाः
गवा	गोभ्यां	गोभिः
गवे	गोभ्यां	गोभ्यः
गोः	गोभ्यां	गोभ्यः
गोः	गवोः	गवाम्
गवि	गवोः	गोषु

வினுக்கள்.

1. விளி வேற்றுமையின் ஒருமை **स्** எப்போது கெடும்?

2. **इ** கார ஈற்றுச் சொல்லுக்குப் பின் வரும் 3-ம் வேற்றுமை ஒருமை எப்படித் திரியும்?

3. **अ** கார ஈற்றுச் சொல்லுக்குப் பின் வரும் 3, 4, 5, 6 வேற்றுமைகளின் ஒருமை எப்படித் திரியும்?

4. **ऋ** கர ஈற்றுச் சொற்களுக்குப் பின் 5, 6-ம் வேற்றுமை ஒருமை வரின் எவ்வாறு திரியும்?

5. **ओ** கார ஈற்றுச் சொற்களுக்குப் பின் 2-ம் வேற்றுமை ஒருமை வரின் ஈற்று **ओ** காரம் எப்படித் திரியும்?

6. **पितृ** சப்தத்திற்கும் **धातृ** சப்தத்திற்கும் பின் எந்தெந்த வேற்றுமை உருபு வரின் வேற்றுமை (பேதம்) தோன்றும்?

7. அடியில் கண்ட ரூபங்களை விதிகளைக் கூறி விளக்குக—

रामाणाम्, हरेः, हे शम्भो, धातरि, गोः, पितॄन्।

பாடம் 10.

अजन्त स्त्रीलिङ्ग शब्दाः ।

आकारान्ता इकारान्ता उकारान्ताश्च ।

52. आ, ई இவைகளை ஈற்றில் உடைய சொற்களுக்குப் பின் வரும் முதல் வேற்றுமை ஒருமை உருபாகிய स् என்பது கெடும்.

(உ-ம்) रमा, गौरी

53. आ கார ஈற்று ஸ்த்ரீலிங்கச் சொற்களுக்குப் பின் வரும் 1, 2, 8-ம் வேற்றுமைகளின் இருமை உருபாகிய औ என்பது ई எனத் திரியும்.

(உ-ம்) रमे

54. 3, 8-ம் வேற்றுமை ஒருமை உருபுகள் வரினும் 6, 7 வேற்றுமை இருமை உருபுகள் வரினும் ஸ்த்ரீலிங்கச் சொற்களின் ஈற்று आ என்பது ए எனத் திரியும்.

(உ-ம்) हे रमे

55. आ ஈற்று ஸ்த்ரீலிங்க சொற்களுக்குப் பின் 4, 5, 6, 7 வேற்றுமை ஒருமை உருபுகள் வரின் இடையில் या தோன்றும்.

(உ-ம்) रमायै, रमायाः

56. **आ, ई** ஈற்றுச் சொற்களுக்குப் பின் வரும் 7-ம் வேற்றுமை ஒருமை உருபாகிய **इ** என்பது **आम्** எனத் திரியும்.

(உ-ம்) रमायाम्, गौर्याम्

आकारान्तः स्त्रीलिङ्गो रमाशब्दः

रमा	रमे	रमाः
हे रमे	हे रमे	हे रमाः
रमाम्	रमे	रमाः
रमया	रमाभ्यां	रमाभिः
रमायै	रमाभ्यां	रमाभ्यः
रमायाः	रमाभ्यां	रमाभ्यः
रमायाः	रमयोः	रमाणाम्
रमायां	रमयोः	रमासु

57. **इ, उ** ஈற்று ஸ்த்ரீலிங்க சொற்களுக்குப் பின் 4, 5, 6, 7 வேற்றுமை ஒருமை உருபுகள் வரின் இடையில் **आ** என்பது தோன்றினும் தோன்றும். **आ** தோன்றாதபோது ரூபம் புல்லிங்கத்தை ஒத்திருக்கும்.

(உ-ம்) मत्यै }
मतये }

58. 7-ம் வேற்றுமை ஒருமை உருபுக்கும் சொல்லுக்கும் இடையில் **आ** வரும் போது அவ் வுருபு **आम्** எனத் திரியும்.

(உ-ம்) मत्यां }
मतौ }

इकारान्तः स्त्रीलिङ्गो मतिशब्दः

मतिः	मती	मतयः
हे मते	हे मती	हे मतयः
मतिं	मती	मतीः
मत्या	मतिभ्यां	मतिभिः
मत्यै मतये	मतिभ्यां	मतिभ्यः
मत्याः मतेः	मतिभ्यां	मतिभ्यः
मत्याः मतेः	मत्योः	मतीनाम्
मत्यां मतौ	मत्योः	मतिषु

उकारान्तः स्त्रीलिङ्गो धेनुशब्दः

धेनुः	धेनू	धेनवः
हे धेनो	हे धेनू	हे धेनवः
धेनुं	धेनू	धेनूः
धेन्वा	धेनुभ्यां	धेनुभिः
धेन्वै } धेनवे }	धेनुभ्यां	धेनुभ्यः
धेन्वाः } धेनोः }	धेनुभ्यां	धेनुभ्यः
धेन्वाः } धेनोः }	धेन्वोः	धेनूनाम्
धेन्वां } धेनौ }	धेन्वोः	धेनुषु

பாடம் 11.

ईकारान्ता ऊकारान्ताः ऋकारान्ताश्च ।

59. 8-ம் வேற்றுமை ஒருமை உருபு வரின் ஸ்த்ரீலிங்க சொற்களின் ஈற்று ई கார ऊ காரங்கள் குறுகும்.

(உ-ம்) हे गौरि, हे वधु

60. ई, ऊ, ஈற்றுச் சொற்களுக்குப் பின் வரும் 2-ம் வேற்றுமைப் பன்மை உருபாகிய अस् என்பதன் अ காரம் கெடும்.

(உ-ம்) गौरीः, वधूः

61. ई, ऊ ஈற்று ஸ்த்ரீலிங்கச் சொற்களுக்குப் பின் 4, 5, 6, 7-ம் வேற்றுமை ஒருமை உருபுகள் வரின் இடையில் आ தோன்றும்.

(உ-ம்) गौर्यै, वध्वै

ईकारान्तः स्त्रीलिङ्गो गौरीशब्दः

गौरी	गौर्यौ	गौर्यः
हे गौरि	हे गौर्यौ	हे गौर्यः
गौरीं	गौर्यौ	गौरीः
गौर्या	गौरीभ्यां	गौरीभिः
गौर्यै	गौरीभ्यां	गौरीभ्यः
गौर्याः	गौरीभ्यां	गौरीभ्यः

गौर्याः	गौर्योः	गौरीणाम्
गौर्यां	गौर्योः	गौरीषु

ऊकारान्तः स्त्रीलिङ्गो वधूशब्दः

वधूः	वध्वौ	वध्वः
हे वधु	हे वध्वौ	हे वध्वः
वधूं	वध्वौ	वधूः
वध्वा	वधूभ्यां	वधूभिः
वध्वै	वधूभ्यां	वधूभ्यः
वध्वाः	वधूभ्यां	वधूभ्यः
वध्वाः	वध्वोः	वधूनाम्
वध्वां	वध्वोः	वधूषु

ऋकारान्ताः

இவைகளின் ரூபம் **पितृ** சப்த ரூபத்தை ஒத்திருக்கும். ஆயினும் இது ஸ்த்ரீ லிங்கமாகையால் 2-ம் வேற்றுமைப் பன்மை உருபின் **स्** என்பது **न्** எனத் திரியாது.

(உ-ம்) मातृः

ऋकारान्तः मातृ शब्दः

माता	मातरौ	मातरः
हे मातः	हे मातरौ	हे मातरः
मातरं	मातरौ	मातॄः

मात्रा	मातृभ्यां	मातृभिः
मात्रे	मातृभ्यां	मातृभ्यः
मातुः	मातृभ्यां	मातृभ्यः
मातुः	मात्रोः	मातॄणाम्
मातरि	मात्रोः	मातृषु

வினாக்கள்.

1. **आ** கார ஈற்று ஸ்த்ரீ லிங்கச் சொற்களுக்குப் பின் வரும் 1, 2, 8 வேற்றுமைகளின் இருமை எப்படித் திரியும்?

2. எந்தெந்த வேற்றுமை உருபு பின் வரும்போது ஈற்று **आ** காரம் **ए** எனத் திரியும்?

3. **आ** கார ஈற்றுச் சொல்லுக்குப் பின் 4, 5, 6,7 வேற்றுமை ஒருமை உருபுகள் வரின் இடையில் எது தோன்றும்?

4. **ई** கார ஈற்றுச் சொற்களுக்குப் பின் விளி வேற்றுமை ஒருமை வரின் எப்படித் திரியும்?

5. அடியில் கண்ட ரூபங்களை விதிகளைக் காட்டி விளக்கு—

मातॄः, रमायाम्, वध्वै, मत्याः ।

பாடம் 12.

अजन्त नपुंसकलिङ्ग शब्दाः

अकारान्ताः इकारान्ता उकारान्ता ऋकारान्ताश्च ।

62. अ கார ஈற்று நபும்ஸக லிங்கச் சொல்லுக்குப் பின் வரும் முதல் வேற்றுமை ஒருமை உருபாகிய स् என்பது म् எனத் திரியும்.

(உ-ம்) ज्ञान + स् = ज्ञानम्

63. நபும்ஸக சொற்களுக்குப் பின் வரும் 1, 2, 8-ம் வேற்றுமைகளின் இருமை உருபாகிய औ என்பது ई எனத் திரியும்.

(உ-ம்) ज्ञान + औ = ज्ञाने

64. நபும்ஸக சொற்களுக்குப் பின் வரும் 1, 2, 8-ம் வேற்றுமைப் பன்மை உருபாகிய अस् என்பது इ எனத் திரியும். உயிரீற்றுச் சொல்லுக்குப் பின் इ வரின் இடையில் न् தோன்றும். அப்போது நபும்ஸக சொல்லின் ஈற்று உயிர் நீளும்.

(உ-ம்) ज्ञान + अस् = ज्ञान + इ=ज्ञाना + न् + इ=ज्ञानानि

மற்ற ரூபங்கள் अ கார ஈற்றுப் புல்லிங்க சொற்களின் ரூபங்களைப் போலவே கொள்க.

अकारान्त नपुंसकलिङ्गो ज्ञानशब्दः ।

ज्ञानं	ज्ञाने	ज्ञानानि
हे ज्ञान	हे ज्ञाने	हे ज्ञानानि
ज्ञानं	ज्ञाने	ज्ञानानि
ज्ञानेन	ज्ञानाभ्यां	ज्ञानैः

ज्ञानाय	ज्ञानाभ्यां	ज्ञानेभ्यः
ज्ञानात्	ज्ञानाभ्यां	ज्ञानेभ्यः
ज्ञानस्य	ज्ञानयोः	ज्ञानानां
ज्ञाने	ज्ञानयोः	ज्ञानेषु

65. अ கார மொழிந்த பிற எழுத்துக்களை ஈற்றிலுடைய நபும்ஸக சொற்களுக்குப் பின் 1, 2, 8-ம் வேற்றுமைகளின் ஒருமை உருபுகள் வரின் அவை கெடும்.

(உ-ம்) वारि + स् = वारि । वारि + अम् = वारि

66. इ, उ, ऋ ஈற்று நபும்ஸக சொற்களுக்குப் பின் உயிர் முதல் உருபு வரின் இடையே न् தோன்றும்.

(உ-ம்) वारि + औ = वारि + ई = वारि + न् + ई = वारिणी, मधुनी

67. நபும்ஸகச் சொற்களுக்குப் பின் 8-ம் வேற்றுமை ஒருமை உருபு வரின் ஈற்றிலுள்ள உயிரானது குணம் ஏற்பினும் ஏற்கும்.

(உ-ம்) हे वारे / हे वारि }   हे मधो / हे मधु }

इकारान्त नपुंसकलिङ्गो वारि शब्दः

वारि	वारिणी	वारीणि
हे वारे / हे वारि	हे वारिणी	हे वारीणि
वारि	वारिणी	वारीणि
वारिणा	वारिभ्यां	वारिभिः
वारिणे	वारिभ्यां	वारिभ्यः

वारिणः	वारिभ्यां	वारिभ्यः
वारिणः	वारिणोः	वारीणाम्
वारिणि	वारिणोः	वारिषु

उकारान्त नपुंसकलिङ्गो मधु शब्दः

मधु	मधुनी	मधूनि
हे मधो / हे मधु	हे मधुनी	हे मधूनि
मधु	मधुनी	मधूनि
मधुना	मधुभ्यां	मधुभिः
मधुने	मधुभ्यां	मधुभ्यः
मधुनः	मधुभ्यां	मधुभ्यः
मधुनः	मधुनोः	मधूनां
मधुनि	मधुनोः	मधुषु

ऋकारान्ताः ।

68. इ, उ, ऋ ஈற்றுச் சில நபும்ஸக லிங்கச் சொற்கள்பின் உயிர் முதல் உருபு வரின் மூன்றாம் வேற்றுமை தொடங்கி புல்லிங்க ரூபங்களை ஏற்பினும் ஏற்கும்.

ऋकारान्त नपुंसकलिङ्गः कर्तृ शब्दः

कर्तृ	कर्तृणी	कर्तॄणि
हे कर्तः / हे कर्तृ	हे कर्तृणी	हे कर्तॄणि

कर्तृ	कर्तृणी	कर्तृणि
कर्तृणा कर्त्रा	कर्तृभ्यां	कर्तृभिः
कर्तृणे कर्त्रे	कर्तृभ्यां	कर्तृभ्यः
कर्तृणः कर्तुः	कर्तृभ्यां	कर्तृभ्यः
कर्तृणः कर्तुः	कर्तृणोः कर्त्रोः	कर्तृणाम्
कर्तृणि कर्तरि	कर्तृणोः कर्त्रोः	कर्तृषु

इति अजन्ताः ।

வினாக்கள்.

1. **अ** கார ஈற்று நபும்ஸகச் சொற்களுக்குப் பின் 1, 2, 8-ம் வேற்றுமை பன்மை உருபு வரின் எப்படி ரூபமேற்கும்?

2. **इ, उ, ऋ** ஈற்றுச் சொற்களுக்குப் பின் உயிர் முதல் உருபு வரின் இடையில் எது தோன்றும்?

3. **इ** கார ஈற்றுச் சொற்கள் நபும்ஸக லிங்கத்தில் எப்படி ரூபமேற்கும்?

4. கீழ் கண்ட ரூபங்களை விதிகளுடன் விளக்கு.

ज्ञानानि, वारिणी, हे कर्तः, हे कर्तृ ।

5. **इ** கார ஈற்றுச் சொற்களுக்குப் பின் 4-ம் வேற்றுமை ஒருமை வரின் நபும்ஸகத்தில் வரும் விதி என்ன?

हलन्त पुंल्लिङ्गाः

चकारान्ता जकारान्ताश्च ।

69. च्, ज् இவ்விரண்டும் தனித்து நிற்பினும் இவற்றுக்குப் பின் (அநுநாஸிகம் அந்தஸ்தம் ஒழிந்த) மெய்வரினும் क வர்க்கமாகத் திரியும்.

(உ-ம்) जलमुच् + स् = जलमुच् + = जलमुक् ।

चकारान्तः पुंलिङ्गो जलमुच् शब्दः

जलमुक्	जलमुचौ	जलमुचः
हे जलमुक्	हे जलमुचौ	हे जलमुचः
जलमुचं	जलमुचौ	जलमुचः
जलमुचा	जलमुग्भ्यां	जलमुग्भिः
जलमुचे	जलमुग्भ्यां	जलमुग्भ्यः
जलमुचः	जलमुग्भ्यां	जलमुग्भ्यः
जलमुचः	जलमुचोः	जलमुचाम्
जलमुचि	जलमुचोः	जलमुक्षु

जकारान्तः पुंलिङ्गो भिषज् शब्दः

भिषक्	भिषजौ	भिषजः
हे भिषक्	हे भिषजौ	हे भिषजः

भिषजं	भिषजौ	भिषजः
भिषजा	भिषग्भ्यां	भिषग्भिः
भिषजे	भिषग्भ्यां	भिषग्भ्यः
भिषजः	भिषग्भ्यां	भिषग्भ्यः
भिषजः	भिषजोः	भिषजाम्
भिषजि	भिषजोः	भिषक्षु

तकारान्ताः

तकारान्तः पुंलिङ्गो मरुत् शब्दः

मरुत्	मरुतौ	मरुतः
हे मरुत्	हे मरुतौ	हे मरुतः
मरुतं	मरुतौ	मरुतः
मरुता	मरुद्भ्यां	मरुद्भिः
मरुते	मरुद्भ्यां	मरुद्भ्यः
मरुतः	मरुद्भ्यां	मरुद्भ्यः
मरुतः	मरुतोः	मरुताम्
मरुति	मरुतोः	मरुत्सु

70. **अत्** என்பதை ஈற்றிலுள்ள சொற்களுக்குப் பின் 1, 8, வேற்றுமை உருபுகள் வரினும் 2-ம் வேற்றுமை ஒருமை இருமை உருபுகள் வரினும் **त्** என்ற எழுத்துக்கு முன் **न्** தோன்றும்.

(உ-ம்) पचत् + स् = पचत् + = पचन् त् = पचन् ।

तकारान्तः पुंलिङ्गः पचत् शब्दः

पचन्	पचन्तौ	पचन्तः
हे पचन्	हे पचन्तौ	हे पचन्तः
पचन्तं	पचन्तौ	पचतः
पचता	पचद्भ्यां	पचद्भिः
पचते	पचद्भ्यां	पचद्भ्यः
पचतः	पचद्भ्यां	पचद्भ्यः
पचतः	पचतोः	पचताम्
पचति	पचतोः	पचत्सु

71. **मत्, वत्** என்ற தத்தித விகுதியை ஈற்றிலுடைய சொற்களுக்குப் பின் முதல் வேற்றுமை ஒருமை வரின் **न्** க்கு முன் உள்ள **अ** காரம் நீளும். **महत्** என்ற சொல்லுக்குப் பின் முதல் வேற்றுமை உருபுகள் வரினும் (ஒருமை ஒழிந்த) 8-ம் வேற்றுமை உருபுகள் வரினும் (பன்மை ஒழிந்த) 2-ம் வேற்றுமை உருபுகள் வரினும் **न्** க்கு முன் உள்ள **अ** காரம் நீளும்.

तकारान्तः पुंलिङ्गो धीमत् शब्दः

धीमान्	धीमन्तौ	धीमन्तः
हे धीमन्	हे धीमन्तौ	हे धीमन्तः
धीमन्तं	धीमन्तौ	धीमतः

तकारान्तः पुंलिङ्गो महत् शब्दः

महान्	महान्तौ	महान्तः

हे महन्	हे महान्तौ	हे महान्तः
महान्तं	महान्तौ	महतः

शेषं पचत् शब्दवत्

नकारान्ताः

72. न கார ஈற்றுச் சொற்களுக்குப் பின் முதல் வேற்றுமை உருபுகள் வரினும், (ஒருமை ஒழிந்த) 8-ம் வேற்றுமை உருபுகள் வரினும், (பன்மை ஒழிந்த) 2-ம் வேற்றுமை உருபுகள் வரினும் ஈற்றுக் கயல் अ காரம் நீளும்.

73. न கார ஈற்றுச் சொற்களின் ஈற்று न காரம் தனித்து நிற்பினும் மெய்முதல் உருபு வரினும் கெடும்; 8-ம் வேற்றுமை ஒருமை உருபு வரின் கெடாது.

(உ-ம்) राजन् + स् = राजान् + स् = राजा

74. न கார ஈற்றுச் சொற்களுக்குப் பின் 2-ம் வேற்றுமைப் பன்மை உருபாகிய अस् தொடங்கி உயிர் முதல் உருபு வரின் ஈற்றுக் கயல் अ காரம் கெடும்.

(உ-ம்) राज्ञः

75. 7ம் வேற்றுமை ஒருமை வரின் கெடினும் கெடும்.

(உ-ம்) राज्ञि, राजनि

76. न கார ஈற்றுச் சொற்களின் ஈற்றுக்கயல் अ காரம் म्, व् எழுத்துக்களை ஈற்றிலுள்ள கூட்டெழுத்துக்குப் பின் வரின் அது இயல்பாம்.

नकारान्तः पुंलिङ्गो 'राजन्' शब्दः

राजा	राजानौ	राजानः
हे राजन्	हे राजानौ	हे राजानः
राजानं	राजानौ	राज्ञः
राज्ञा	राजभ्यां	राजभिः
राज्ञे	राजभ्यां	राजभ्यः
राज्ञः	राजभ्यां	राजभ्यः
राज्ञः	राज्ञोः	राज्ञाम्
राज्ञि राजनि	राज्ञोः	राजसु

नकारान्तः पुंलिङ्गो 'आत्मन्' शब्दः

आत्मा	आत्मानौ	आत्मानः
हे आत्मन्	हे आत्मानौ	हे आत्मानः
आत्मानं	आत्मानौ	आत्मनः
आत्मना	आत्मभ्यां	आत्मभिः
आत्मने	आत्मभ्यां	आत्मभ्यः
आत्मनः	आत्मभ्यां	आत्मभ्यः
आत्मनः	आत्मनोः	आत्मनाम्
आत्मनि	आत्मनोः	आत्मसु

77. **न** கார ஈற்றுச் சொற்களுக்குப் பின் முதல் வேற்று ஒருமை உருபு வரின் ஈற்றுக் கயல் इ காரம் நீளும்.

नकारान्तः पुंलिङ्गो गुणिन् शब्दः

गुणी	गुणिनौ	गुणिनः
हे गुणिन्	हे गुणिनौ	हे गुणिनः
गुणिनं	गुणिनौ	गुणिनः
गुणिना	गुणिभ्यां	गुणिभिः
गुणिने	गुणिभ्यां	गुणिभ्यः
गुणिनः	गुणिभ्यां	गुणिभ्यः
गुणिनः	गुणिनोः	गुणिनाम्
गुणिनि	गुणिनोः	गुणिषु

शकारान्ताः

78. மெய் முதல் உருபு வரினும் தனித்து நிற்பினும் श கார ஈற்றுச் சொற்களின் ஈற்று श காரம் சில சொற்களில் क् எனவும் வேறிடங்களில் ट् எனவும் திரியும்.

शकारान्तः पुंलिङ्गः 'तादृश्' शब्दः

तादृक्	तादृशौ	तादृशः
हे तादृक्	हे तादृशः	हे तादृशः
तादृशं	तादृशौ	तादृशः
तादृशा	तादृग्भ्यां	तादृग्भिः
तादृशे	तादृग्भ्यां	तादृग्भ्यः
तादृशः	तादृग्भ्यां	तादृग्भ्यः
तादृशः	तादृशोः	तादृशाम्
तादृशि	तादृशोः	तादृक्षु

शकारान्तः पुंलिङ्गो 'विश्' शब्दः

विट्	विशौ	विशः
हे विट्	हे विशौ	हे विशः
विशं	विशौ	विशः
विशा	विड्भ्यां	विड्भिः
विशे	विड्भ्यां	विड्भ्यः
विशः	विड्भ्यां	विड्भ्यः
विशः	विशोः	विशाम्
विशि	विशोः	विट्सु

षकारान्ताः

79. ष கார ஈற்றுச் சொல்லின் ष காரம் தனித்து நிற்பினும் மெய் முதல் உருபு வரினும் ट கார மாகத் திரியும்.

षकारान्तः पुंलिङ्गो 'द्विष्' शब्दः

द्विट्	द्विषौ	द्विषः
हे द्विट्	हे द्विषौ	हे द्विषः
द्विषं	द्विषौ	द्विषः
द्विषा	द्विड्भ्यां	द्विड्भिः
द्विषे	द्विड्भ्यां	द्विड्भ्यः
द्विषः	द्विड्भ्यां	द्विड्भ्यः
द्विषः	द्विषोः	द्विषाम्
द्विषि	द्विषोः	द्विट्सु

सकारान्ताः

80. **स्** கார ஈற்றுச் சொல்லுக்குப் பின் முதல் வேற்றுமை ஒருமை உருபு வரின் ஈற்றுக் கயல் **अ** காரம் நீளும்.

(உ-ம்) वेधाः

81. **स** கார ஈற்றுச் சொல்லுக்குப் பின் **भ्** முதல் உருபு வரின் ஈற்று **स** காரம் **उ** காரமாகத் திரியும்.

(உ-ம்) वेधोभ्याम्

सकारान्तः पुंलिङ्गो वेधस् शब्दः

वेधाः	वेधसौ	वेधसः
हे वेधः	हे वेधसौ	हे वेधसः
वेधसं	वेधसौ	वेधसः
वेधसा	वेधोभ्यां	वेधोभिः
वेधसे	वेधोभ्यां	वेधोभ्यः
वेधसः	वेधोभ्यां	वेधोभ्यः
वेधसः	वेधसोः	वेधसाम्
वेधसि	वेधसोः	वेधस्सु

82. **यस्, वस्** இவற்றில் முடியும் சொற்களுக்குப் பின் 1, 8 வேற்றுமை உருபுகளும் (பன்மை ஒழிந்த) 2-ம் வேற்றுமை உருபுகளும் வரின் ஈற்று **स** காரத்திற்கு முன் **न** காரம் தோன்றும். அப்போது 8-ம் வேற்றுமை ஒருமை ஒழிந்த மற்ற வேற்றுமை உருபுகள் வரின் **न्** க்கு முன் உள்ள **अ** காரம் நீளும்.

(உ-ம்) श्रेयस् + स् = श्रेयन्स् + = श्रेयान्

हे श्रेयन्

83. ஒரு சொல்லின் ஈற்றில் இல்லாத **न्** க்குப் பின் ஊஷ்மங்கள் வரின் **न्** என்பது அநுஸ்வாரமாகத் திரியும்.

(உ-ம்) **श्रेयांसौ**

सकारान्तः पुंलिङ्गः श्रेयस् शब्दः

श्रेयान्	श्रेयांसौ	श्रेयांसः
हे श्रेयन्	हे श्रेयांसौ	हे श्रेयांसः
श्रेयांसं	श्रेयांसौ	श्रेयसः
श्रेयसा	श्रेयोभ्यां	श्रेयोभिः
श्रेयसे	श्रेयोभ्यां	श्रेयोभ्यः
श्रेयसः	श्रेयोभ्यां	श्रेयोभ्यः
श्रेयसः	श्रेयसोः	श्रेयसाम्
श्रेयसि	श्रेयसोः	श्रेयस्सु

84. **वस्** ஈற்றுச் சொல்லுக்குப் பின் 2-ம் வேற்றுமை பன்மை **अस्** தொடங்கிய உயிர் முதல் உருபு வரின், **व** என்பது **उ** எனத் திரியும்.

(உ-ம்) विद्वस् + अस् = विदुस् + अस् = विदुष् + अस् = विदुषः

85. மெய் முதல் உருபு வரின் **वस्** என்பதின் **स्** என்னும் எழுத்து **त्** எனத் திரியும். **विद्वद्भ्यां**

सकारान्तः पुंलिङ्गो विद्वस् शब्दः

विद्वान्	विद्वांसौ	विद्वांसः
हे विद्वन्	हे विद्वांसौ	हे विद्वांसः
विद्वांसं	विद्वांसौ	विदुषः
विदुषा	विद्वद्भ्यां	विद्वद्भिः

विदुषे	विद्वद्भ्यां	विद्वद्भ्यः
विदुषः	विद्वद्भ्यां	विद्वद्भ्यः
विदुषः	विदुषोः	विदुषाम्
विदुषि	विदुषोः	विद्वत्सु

हकारान्ताः

86. தனித்து நிற்பினும் மெய் முதல் உருபு வரினும் மொழி யீற்றிலுள்ள ह् சில சொற்களில் ट् எனவும் வேறு சில சொற்களில் क् எனவும் திரியும்.

हकारान्तः पुंलिङ्गो 'लिह्' शब्दः

लिट्	लिहौ	लिहः
लिहं	लिहौ	लिहः
लिहा	लिड्भ्यां	लिड्भिः
लिहे	लिड्भ्यां	लिड्भ्यः
लिहः	लिड्भ्यां	लिड्भ्यः
लिहः	लिहोः	लिहाम्
लिहि	लिहोः	लिट्सु

हकारान्तः पुंलिङ्गो दुह् शब्दः

दुक्	दुहौ	दुहः
दुहं	दुहौ	दुहः
दुहा	धुग्भ्यां	धुग्भिः

दुहे	धुग्भ्यां	धुग्भ्यः
दुहः	धुग्भ्यः	धुग्भ्यः
दुहः	दुहोः	दुहाम्
दुहि	दुहोः	धुक्षु

வினாக்கள்.

1. **त** கார ஈற்றுச் சொற்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

2. **महत्** சப்தமும் **धीमत्** சப்தமும் எந்தெந்த வேற்றுமை உருபு வரின் வேறுபடும்?

3. **न** கார ஈற்றுச் சொற்களின் ஈற்றுக்கயல் **अ** காரம் எப்போது கெடும்?

4. **न** கார ஈற்றுச் சொற்களின் **न** காரம் எப்போது கெடும்?

5. **स** கார ஈற்றுச் சொற்களின் ஈற்று **स्, ष्** முதல் உருபு வரின் எப்படித் திரியும்?

6. இரண்டாம் வேற்றுமைப் பன்மை உருபு வரின் **विद्वस्** சப்தத்தின் **वस्** என்பது எப்படித் திரியும்?

7. தனித்து வரும் ஈற்று **श्, ष्** எழுத்துக்கள் எப்படித் திரியும்?

பாடம் 14.

हलन्तस्त्रीलिङ्गाः

மெய்யீற்று ஸ்த்ரீலிங்க சொற்கள் அனேகமாய் மெய்யீற்றுப் புல்லிங்க சொற்களைப் போலவே வேற்றுமைப்படும். சில சொற்களுக்கு விசேஷ விதிகளுமுண்டு.

पकारान्तः स्त्रीलिङ्गः अप् शब्दः ।

இது பன்மை உருபுகளை மாத்திரம் ஏற்கும்.

87. முதல் வேற்றுமைப் பன்மை உருபு வரின் இதன் ஈற்றுக்கயல் अ காரம் நீளும்.

(உ-ம்) अप् + अस् = आप् + अस् = आपः

88. भ् என்ற எழுத்தை முதலில் உடைய உருபு வரின் प् என்பது द् எனத்திரியும். अद्भिः,

आपः, अपः, अद्भिः, अद्भ्यः, अद्भ्यः, अपाम्, अप्सु.

रेफान्ताः

89. र கார ஈற்றுச் சொல் தனித்து நிற்பினும் அதற்குப் பின் மெய் முதல் உருபு வரினும் ஈற்றுக் கயலாகிய इ கார उ காரங்கள் நீளும்.

(உ-ம்) गिर् + स् = गीर् + स् = गीर् + = गीः ।

रेफान्तः स्त्रीलिङ्गो गिर् शब्दः

गीः	गिरौ	गिरः
हे गीः	हे गिरौ	हे गिरः

गिरं	गिरौ	गिरः
गिरा	गीर्भ्याम्	गीर्भिः
गिरे	गीर्भ्याम्	गीर्भ्यः
गिरः	गीर्भ्यां	गीर्भ्यः
गिरः	गिरोः	गिराम्
गिरि	गिरोः	गीर्षु

रेफान्तः स्त्रीलिङ्गः पुर् शब्दः

पूः	पुरौ	पुरः
हे पूः	हे पुरौ	हे पुरः
पुरं	पुरौ	पुरः
पुरा	पूर्भ्यां	पूर्भिः
पुरे	पूर्भ्यां	पूर्भ्यः
पुरः	पूर्भ्यां	पूर्भ्यः
पुरः	पुरोः	पुराम्
पुरि	पुरोः	पूर्षु

90. **दिव्** என்னும் சொல்லுக்குப் பின் 1, 8 வேற்றுமை ஒருமை உருபு வரின் **व्** என்பது **औ** எனத் திரியும்.

(உ-ம்) दिव् + स् = दि + औ + स् = द्यौ + स् = द्यौः

91. மெய் முதல் உருபு வரின் **दिव्** என்பதன் ஈறாகிய **व्** என்பது **उ** எனத் திரியும்.

(உ-ம்) द्युभ्याम्

68100

वकारान्तः स्त्रीलिङ्गो दिव् शब्दः

द्यौः	दिवौ	दिवः
हे द्यौः	हे दिवौ	हे दिवः
दिवं	दिवौ	दिवः
दिवा	द्युभ्यां	द्युभिः
दिवे	द्युभ्यां	द्युभ्यः
दिवः	द्युभ्यां	द्युभ्यः
दिवः	दिवोः	दिवाम्
दिवि	दिवोः	द्युषु

सकारान्ताः

92. தனித்து நிற்பினும் மெய் முதல் உருபு வரினும் **स** கார ஈற்று ஸ்த்ரீலிங்க சொல்லின் ஈற்று **स्** என்பது **र्** எனத் திரியும். அப்போது ஈற்றுக் கயல் நீளும்.

(உ-ம்) आशिस् + स् = आशिर् + स् = आशिर् +

= आशीर् + = आशीः ।

सकारान्तः स्त्रीलिङ्गः आशिस् शब्दः

आशीः	आशिषौ	आशिषः
आशिषम्	आशिषौ	आशिषः
आशिषा	आशीर्भ्यां	आशीर्भिः
आशिषे	आशीर्भ्यां	आशीर्भ्यः
आशिषः	आशीर्भ्यां	आशीर्भ्यः
आशिषः	आशिषोः	आशिषां
आशिषि	आशिषोः	आशीष्षु

93. தனித்து நிற்பினும் மெய் முதல் உருபு வரினும் **नह्** என்பதின் **ह्** என்ற எழுத்து **द्** எனத் திரியும்.

(உ-ம்) उपानह् + स् = उपानद् + स् = उपावद् + = उपानत् ।

हकारान्तः स्त्रीलिङ्ग उपानह् शब्दः

उपानत्	उपानहौ	उपानहः
हे उपानत्	हे उपानहौ	हे उपानहः
उपानहं	उपानहौ	उपानहः
उपानहा	उपानद्भ्यां	उपानद्भिः
उपानहे	उपानद्भ्यां	उपानद्भ्यः
उपानहः	उपानद्भ्यां	उपानद्भ्यः
उपानहः	उपानहोः	उपानहाम्
उपानहि	उपानहोः	उपानत्सु

வினாக்கள்.

1. **अप्** என்ற சொல்லின் ஈற்று **प** காரம் எப்போது **द्** எனத் திரியும்?

2. **गिर्** சப்தத்தின் ஈற்றுக் கயல் எப்போது நீளும்?

3. **दिव्** சப்தத்தின் ஈற்று **व** காரம் மெய் முதல் உருபு வரின் எப்படித் திரியும்?

4. **आशिस्** சப்தத்தின் ஈற்று **स्** எப்போது **र्** எனத் திரியும்; அதன் ஈற்றுக் கயல் **इ** என்னு மெழுத்து எப்போது நீளும்?

5. **उपानह्** என்பதின் ஈற்று **ह्** எப்போது **द्** எனத் திரியும்?

பாடம் 15.

हलन्त नपुंसकलिङ्ग शब्दाः

இவை மூன்றும் வேற்றுமை தொடங்கி புல்லிங்க மெய் யீற்றுச் சொற்களைப் போலவே வேற்றுமைப்படும்.

तकारान्ताः

93. **पचत्**, **दीव्यत्**, முதலிய நிகழ்காலப் பெயரெச்ச நபும்ஸகலிங்க சொற்களுக்குப் பின் 1, 2, 8-ம் வேற்று இருமை உருபுகள் வரின் ஈற்று **त्** க்கு முன் **न्** தோன்றும் **पचन्ती**.

94. அநுநாஸிகம் அந்தஸ்தம் ஒழிந்த மெய்யீற்று நபும்ஸகலிங்க சொல்லுக்குப் பின் 1, 2, 8-ம் வேற்றுமைப் பன்மை உருபாகிய **इ** காரம் வரின் ஈற்று மெய்க்கு முன் **न्** தோன்றும்.

(உ-ம்) पचन्ति

95. **महत्** என்ற சொல்லிலும் **स्** ஈற்றுச் சொற்களி லும் (தோன்றிய) **न्** க்கு முன் உயிர் நீளும்.

(உ-ம்) महान्ति, मनांसि

तकारान्तनपुंसकलिङ्गः 'पचत्' शब्दः

पचत्	पचन्ती	पचन्ति
हे पचत्	हे पचन्ती	हे पचन्ति
पचत्	पचन्ती	पचन्ति

शेषं पुंवत्

तकारान्तनपुंसकलिङ्गो 'महत्' शब्दः

महत्	महती	महान्ति
हे महत्	हे महती	हे महान्ति
महत्	महती	महान्ति

शेषं पुंवत्

नकारान्ताः

96. **न** கார ஈற்று நபும்ஸகச் சொல்லுக்குப் பின் 1, 2, 8-ம் வேற்றுமை இருமை உருபுகள் வரின் ஈற்றுக்கயல் **अ** காரம் கெடினும் கெடும். ஆனால் அவ்வகாரம் **व्**, **म्** என்று முடியும் கூட்டெழுத்துக்குப் பின் வரின் கெடாது.

(உ-ம்) नाम्नी } कर्मणी
नामनी }

97. **न** கார ஈற்று நபும்ஸக சொல்லுக்குப் பின் 1, 2, 8-ம் வேற்றுமைப் பன்மை உருபுகள் வரின் ஈற்றுக் கயல் உயிர் நீளும்.

(உ-ம்) नामानि, गुणीनि

98. **न** கார ஈற்று நபும்ஸக லிங்க சொல்லுக்குப்பின் 8-ம் வேற்றுமை ஒருமை உருபு வரின் ஈற்று கெடினும் கெடும்.

(உ-ம்) नामन्, नाम

नकारान्तनपुंसकलिङ्गो नामन् शब्दः

नाम	नाम्नी } नामनी }	नामानि

हे नामन् / हे नाम	हे नाम्नी / हे नामनी	हे नामानि
नाम	नाम्नी / नामनी	नामानि

शेषं पुंवत्

नकारान्तनपुंसकलिङ्गः कर्मन् शब्दः

कर्म	कर्मणी	कर्माणि
हे कर्मन् / हे कर्म	हे कर्मणी	हे कर्माणि
कर्म	कर्मणी	कर्माणि

शेषं पुंवत्

सकारान्ताः

सकारान्तनपुंसकलिङ्गो मनस् शब्दः

मनः	मनसी	मनांसि
हे मनः	हे मनसी	हे मनांसि
मनः	मनसी	मनांसि
मनसा	मनोभ्यां	मनोभिः
मनसे	मनोभ्यां	मनोभ्यः
मनसः	मनोभ्यां	मनोभ्यः
मनसः	मनसोः	मनसाम्
मनसि	मनसोः	मनस्सु

99. **स** கார ஈற்று நபும்ஸக லிங்கச் சொற்களின் ஈற்று **स्** தனித்து நிற்பினும் மெய் முதல் உருபு வரினும் **र्** எனத் திரியும். ஆனால் **अ** கார மொழிந்த உயிருக்குப் பின் அந்த **स** என்பது இருக்க வேண்டும்.

(உ-ம்) धनुर्भ्यां

सकारान्तनपुंसकलिङ्गो 'धनुस्' शब्दः

धनुः	धनुषी	धनूंषि
हे धनुः	हे धनुषी	हे धनूंषि
धनुः	धनुषी	धनूंषि
धनुषा	धनुर्भ्यां	धनुर्भिः
धनुषे	धनुर्भ्यां	धनुर्भ्यः
धनुषः	धनुर्भ्यां	धनुर्भ्यः
धनुषः	धनुषोः	धनुषां
धनुषि	धनुषोः	धनुष्षु

इति हलन्ताः ।

வினாக்கள்.

1. **पचत्** என்னும் நபுஸ்கலிங்க சொல்லுக்குப் பின் 1 வேற்றுமை பன்மை உருபு வரின் வரும் விதிகள் யாவை ?

2. **स** கார ஈற்றுச் சொற்களின் ஈற்றுக் கயல் **अ** எப்போது நீளும் ?

3. **न** கார ஈற்றுச் சொற்களுக்குப் பின் விளி வேற்றுமை ஒருமை வரின் என்ன விதி வரும் ?

4. **नामन्** என்ற சொல் 1, 2, 8 வேற்றுமை இருமை வரின் எவ்வாறு ரூபமேற்கும் ?

5. மெய்யீற்றுச் சொற்களின் ஈற்று மெய்க்கு முன் எப்போது **न्** தோன்றும் ?

பாடம் 16.

सर्व नाम शब्दाः

पुल्लिङ्गाः

வட மொழியில் **सर्व, यद्, तद्, एतद्, युष्मद्, अस्मद्, किम्, इदम्, अदस्** இவை மிகவும் முக்கியமான ஸர்வநாம சப்தங்களாம்.

100. அ கார ஈற்று ஸர்வநாம சொற்களுக்குப் பின் 1, 6 வேற்றுமைப் பன்மை உருபுகள் முறையே **ई** எனவும் **साम्** எனவும் திரியும்.

(உ-ம்) सर्व + अस् = सर्व + ई = सर्वे

सर्व + आम् = सर्वे + साम् = सर्वेषाम्

101. **அ** கார ஈற்று ஸர்வநாம சொற்களுக்குப் பின் வரும் 4, 5, 7 வேற்றுமை ஒருமை உருபுகள் முறையே **स्मै, स्मात्, स्मिन्** எனத் திரியும்.

(உ-ம்) सर्वस्मै

अकारान्तः पुंलिङ्गः सर्व शब्दः

सर्वः	सर्वौ	सर्वे
हे सर्व	हे सर्वौ	हे सर्वे
सर्वं	सर्वौ	सर्वान्
सर्वेण	सर्वाभ्यां	सर्वैः
सर्वस्मै	सर्वाभ्यां	सर्वेभ्यः

सर्वस्मात्	सर्वाभ्यां	सर्वेभ्यः
सर्वस्य	सर्वयोः	सर्वेषाम्
सर्वस्मिन्	सर्वयोः	सर्वेषु

दकारान्ताः

102. **यद्, तद्, एतद्** இவற்றுக்குப் பின் வேற்றுமை உருபுகள் வரின் ஈற்று **द्** கெடும். அப்போது **अ** கார ஈற்று ஸர்வநாம சொல்லைப் போல் வேற்றுமைப் படும்.

(உ-ம்) **यः**

[ஸ்த்ரீ லிங்கத்தில் **आ** கார ஈற்று ஸர்வநாம சொல்லைப் போல் வேற்றுமைப்படும் (உ-ம்) **या**]

दकारान्तः पुंलिङ्गो यद् शब्दः

यः	यौ	ये
यं	यौ	यान्
येन	याभ्यां	यैः
यस्मै	याभ्यां	येभ्यः
